Ministry of JUSTICE

**முன்னுரை**

நம் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கும் நூற்றுக்காணக்கான சட்டங்கள் இயற்றப்படுகின்றன. இதனால் உண்மையில் அடிப்படை உரிமைகள் என்ன என அறிந்துகொள்வது கூட சில நேரங்களில் கடினமாக இருக்க முடியும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நம் அடிப்படை உரிமைகளை, மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய ஒப்பந்தத்தில் (ECHR) பதிந்து வைக்க பிரிட்டிஷ்காரரர்கள் உதவினர். ஆனால் ஸ்ராட்பார்குச் செல்லும் நெடுவழிப் பாதையில் போவதன் மூலம் மட்டுமே ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதாக நாம் கோரிக்கொள்ள முடியும்.

மனித உரிமைகள் சட்டம் என்றால் இங்கே ஐக்கிய இராச்சியத்தில்(UK) நம் உரிமைகளை நாம் காத்துக்கொள்ள முடிவதாகும். மேலும் நாம் பகிர்ந்து கொள்ளும் அடிப்படை மதிப்புகள் மற்றும் தரங்கள்பற்றி நாம் எல்லோரும் அதிகம் தெளிவாக இருக்க முடிவதும்மாகும். இத்துண்டுப்பிரசுரம் மனித உரிமைகள் சட்டத்தை அறிமுகப்படுத்தி அது எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை கூறுகிறது. யூகே அரசாங்கங்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஐரோப்பிய ஒப்பந்தத்தை மதித்து நடந்து வந்துள்ளன. எனவே ஒருவேளை உங்களுக்கு இந்த சட்டம் ஒரு போதும் தேவைப்படததாய் இருக்கலாம். ஆனால் எப்போதாவது உங்கள் உரிமைகள் மீறப்பட்டால் அது குறித்து நீங்கள் ஏதாவது செய்ய முடியும் என அறிந்திருப்பது நல்லது.

**மனித உரிமைச் சட்டம் என்பது என்ன?**

1998– மனித உரிமைகள் சட்டம் என்பது 2000 அக்டோபரில் நடைமுறைக்கு வந்தது. மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய ஒப்பந்தத்தில் காணப்படும் அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் அது யூகே–யில் கூடுதல் விளைவைக் கொடுக்கிறது.

**அது என்ன செய்கிறது?**

இந்த சட்டம் மூன்று எளிய செயல்களைச் செய்கிறது:

- அரசுத்துறை, வட்டார அதிகாரி, அல்லது காவல்துறை (பொலீஸ்)போன்ற ஒரு பொது அதிகாரம், ஒப்பந்தத்தின்

விதிகளை மீறுவதை– வேறுவிதமாக அது நடந்துகொண்டிருக்க முடியாது என நாடாளுமன்றச் சட்டம் குறிக்காவிட்டால் அது சட்டவிரோதம் ஆக்கிறது.

- மனித உரிமைகள் தொடர்பான வழக்குகள் யூகே–யில் இருக்கும் ஒரு வழக்கு மன்றத்திலேயோ அல்லது தீர்பாலத்திலேயோ(றைபூனல்) நடத்தப்பட முடியும் என்பதை அது குறிக்கிறது. இதுவரை உள்ள சட்டம் என்ன என்றால் ஒப்பந்தத்தில் உள்ள நம் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உணர்ந்த எவரும் ஸ்ட்ராஸ்பர்கில் இருக்கும் மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய மன்றத்துக்குப் போயாக வேண்டியிருந்தது.

- யுகே–யின் சட்டவிதிப்புகளுக்கு–முடியுமானால்–ஒப்பந்தத்தின் உரிமைகளுக்குப் பொருந்தக் கூடிய பொருள் தரப்பட வேண்டும் என்கிறது. அது முடியாது என ஒரு வழக்கு மன்றம் கூறுமானால் என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்க வேண்டியது நாடாளுமன்றத்தின் பொறுப்பாகும்.

**மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய ஒப்பந்தம் என்பதென்ன?**

2–ம் உலகப்போருக்குப் பின் அடிப்பட்ட கொடும் செய்கைகளும் அட்டூழியங்களும் மறுபடியும் நிகழ்வதைத் தடுக்க ஒன்று சேரும்படி சேர் வின்சன்ட் சேர்சில் அழைத்த நாடுகளின் குழுவான ஐரோப்பிய மன்றம் நிறைவேற்றிய மிக முன்னதான – மிக முக்கியமான ஒப்பந்தங்களில் இது ஒன்றானதாகும்.

ஐரோப்பிய மன்றம் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU)-ல் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். ஸ்ட்ராஸ்பக்கில் அதற்கு உரிய மனித உரிமைகள் வழக்கு மன்றம் உள்ளது. ஈசிஎச்ஆர் (ECHR)–ன் கீழ் உங்கள் உரிமைகளை கோர ஸ்ட்ராஸ்பர்க் மன்றத்திற்க்குப் போக ஏற்கனவே உங்களால் முடியும்.

இருந்தாலும் 2000–வரை, ECHR, யுகே–யின் உள்நாட்டுச் சட்டத்தின் பகுதியினர் இருக்கவில்லை, எனவே நமது வழக்கு மன்றங்களும் பொதுவாக கோரிக்கைகளைப் பரிசீலிக்க முடியாதிருந்தது.

**ஒப்பந்தத்தில் உங்களுக்கு உள்ள உரிமைகள்**
மனித உரிமைகள் சட்டத்தில் 16–வது அடிப்படை உரிமைகள் உள்ளன, அவை அனைத்தும் மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய ஒப்பந்தத்தில் இருந்து எடுத்தவை. வதை, கொலை இவற்றிலிருந்து விடுதலை போன்ற வாழ்வு–சாவு விடயங்களை மட்டும் அவை கவனிப்பதில்லை. நீங்கள் என்ன சொல்ல முடியும். உங்கள் நம்பிக்கைகள், ஒரு நியாயமான விசாரணைக்கான உங்கள் உரிமை, இன்னும் இதுபோன்ற வேற பல அடிப்படை உரிமைகள் என உங்கள் அன்றாட வாழ்வு சார்ந்த உரிமைகளையும் அவை கவனிக்கின்றன.

(**ஓப்பந்தவிதி 1:** முகவுரை)

**ஒப்பந்த விதி 2:**
**உயிர் வாழ உரிமை**

உங்கள் உயிர் வாழ்க்கை சட்டத்தால் பாதுகாக்கப்பட்டிருப்பதற்கு உங்களுக்கு முழு உரிமை உண்டு. மிகவும் வரம்புடைய குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் மட்டுமே ஒருவரின் உயிரை அரசு எடுப்பது ஏற்கப்படுகிறது. (உ–ம் ஒரு காவல்துறை அதிகாரி தற்பாதுகாப்புக்காக நியாயமாகக் செயல்படுதல்)

**ஒப்பந்த விதி 3:**
**வதைப்பு விலக்கு**

வதைக்கப் பாடாதிருப்பதற்கோ, மனிதத் தன்மையற்ற அல்லது இழிவுபடுத்துகிற, நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படாதிருப்பதற்கோ உங்களுக்கு உரிமை உண்டு.

**ஒப்பந்த விதி 4:**
**அடிமைத்தனம் மற்றும் கட்டாய உழைப்பு விலக்கு**

ஒரு அடிமையாக நடத்தப்படாதிருக்கவோ சில விதமான வேலைகளைச் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்தப்படாதிருக்கவோ உங்களுக்கு முழு உரிமை உண்டு.

**ஒப்பந்த விதி 5:**
**சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு உரிமை**

விதியில் குறிப்பிட்டுள்ள வரம்புடைய சூழ்நிலைகளில் (உ–ம்: நீ'ங்கள் குற்றவாளி என சந்தேகப்படும் போது அல்லது ஒரு குற்றம் இழைத்ததற்காக தண்டிக்கப்படும் போது) ஒரு தெளிவான சட்ட நடைமுறையால் அது நியாயப்படுத்தப்படும் போதும் தவிர உங்கள்

சுதந்திரம் பறிபோகாதிருக்க – "நீங்கள் கைதுசெய்யப்பட்டோ காவலில் வைக்கப்பட்டடோ" உள்படாதிருக்க உங்களுக்கு உரிமை உண்டு.

**ஒப்பந்த விதி 6:**
**நியாயமான விசாரணைக்கான உரிமை**

பொறுக்கக் கூடிய ஒரு கால அளவுக்குள் ஒரு நியாயமான பொது விசாரணை கோர உங்களுக்கு உரிமை உண்டு. உங்களுக்கு எதிரான குற்றவியல் சாட்டுக்களிலும் அல்லது உங்கள் குடி உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான நிலவரங்களை வகைபிரிப்பதிலும் இது பொருந்துகிறது. விசாரணைகள் சட்டத்தால் நிறுவப்படும் சுயேட்ச்சையான நடுநிலையான தீர்ப்பாயத்தால் மட்டுமே மேற்கொள்ளப்பட்ட வேண்டும். தேசப் பாதுகாப்பு அல்லது பொது அமைதி போன்றவற்றைக் காக்கும் தேவை இருக்குமிடத்து விசாரணையின் போது பொதுமக்கள் தவிர்க்கப்பட வாய்ப்பு உண்டு. (தீர்ப்பின் போதல்ல).

அது ஒரு குற்றவியல் சாட்டு என்றால் சட்டப்படி நீங்கள் குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை நீங்கள் குற்றமற்றவராகவே கருதப்படுவீர்கள். உங்களை தற்பாதுகாத்துக்கொள்ள குறிப்பிட்ட உத்திரவாதமுள்ள உரிமைகள் உங்களுக்கு உண்டு.

**ஒப்பந்த விதி 7:**
**சட்டமின்றி தண்டனை இல்லை**

நீங்கள்செய்யப்பட்ட அந்த நேரத்தில் குற்றமாக இல்லாதிருந்து செயல்களில் இருந்து எழும் ஒரு குற்றத்திற்கு நீங்கள் பொறுப்பாளி ஆகாதிருக்கும் உரிமை பொதுவாக உங்களுக்கு உண்டு. ஒரு குற்றத்துக்கான தண்டனையில் பின்னர் ஏற்படக் கூடும் அதிகரிப்புகளில் இருந்தும் நீங்கள் காக்கப்படுகிறீர்கள்.

**வரையறைக்குட்பட்ட உரிமைகள்**

விதி 8 முதல் 11 வரையில் உள்ள உரிமைகள் ஒரு முக்கிமான நோக்கத்தை அடையத் தேவையான அளவில் வரம்புப்படுத்தலாம்.

வரம்புகளை அனுமதிக்கும் ஒவ்வொரு விதியிலும் குறிப்பான நோக்கங்கள் வேறுபடும். ஆனால் அவை பொதுநலனை அல்லது பாதுகாப்பை காப்பது, குற்றத்தைத் தடுப்பது, மற்றவர் உரிமைகளைக் காப்பது போன்றவற்றை கொண்டவையாகவே இருக்கும்.

## ஒப்பந்த விதி 8:
### சொந்த மற்றும் குடும்ப வாழ்வு மதிக்கப்படும் உரிமை

உங்கள் சொந்த மற்றும் குடும்ப வாழ்க்கை, உங்கள் வீடு, கடிதப்போக்குவரத்து, ஆகியவை மதிக்கப்பட்டும் உரிமை உங்களுக்கு உண்டு. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே இந்த உரிமை மறுக்கப்பட முடியும்.

## ஒப்பந்த விதி 9:
### எண்ணம்– மனச்சாட்சி–மதம் ஆகியவற்றில் சுதந்திரம்

பலவிதமான பார்வைகள், கருத்துகளைக் கைக்கொள்ளவும் மதத்தை நம்பவும் உங்களுக்கு உரிமை உண்டு. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

## ஒப்பந்த விதி 10:
### வெளிப்பாட்டு சுதந்திரம்

அபிப்பிராயங்கள் கொள்ளவோ, நீங்கள் தனியாகவோ ஒரு குழுவில் இருந்தோ உங்கள் கருத்துக்களை வெளியிடவோ உங்களுக்கு உரிமை உண்டு. அவை பொதுவாக விரும்பத்தக்கதாகவோ அமைதியை குலைப்பதாகவோ இருந்தாலும் இது பொருந்தும். குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே இந்த உரிமை கட்டுப்படுத்த முடியும்.

## ஒப்பந்த விதி 11:
### கூட்டும் மற்றும் அமைப்பாடும் சுதந்திரமும்

ஏனைய மக்களுடன் அமைதியான முறையில் கூடும் உரிமை உங்களுக்கு உண்டு. மற்றவர்களுடன் சேர்ந்து அமைப்பாக்கும் உரிமையும் உங்களுக்கு உண்டு. இதில் தொழில் சங்கம் அமைக்கும் உரிமையும் உள்படும். குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே இந்த உரிமைகள் கட்டுப்படுத்தப்படலாம்.

## ஒப்பந்த விதி 12:
### மணம் செய்ய உரிமை

ஆண்களும் பெண்களும் மணம்செய்து குடும்பத்தைத் தொடங்க உரிமை உண்டு. ஆயினும் எந்த வயதில் எந்த முறையில் அது நடக்க முடியும் என்பதை தேச விதி கட்டுப்படுத்தும்.

(**விதி 13** மனித உரிமைகள் சட்டத்தில் சேர்க்கப்படவில்லை)

**ஒப்பந்த விதி 14:**
**பாகுபடுத்தலுக்கு விலக்கு**

ஒப்பந்த உரிமைகளைப் பயன்படுத்துவதில் உங்கள் இனம், மதம், பால், அரசியல் பார்வைகள், அல்லது வேறு ஏதாவது தகுதியால் மாறுபாடாக நடத்தப்படாதிருக்க – அதாவது அப்படி நடத்தப்படுவதற்கு புறநிலையான நியாயம் ஏதும் இல்லை என்றால் – உங்களுக்கு உரிமை உண்டு. ஒவ்வொருவருக்கும், அவர்கள் தகுதியாதாயினும் ஒப்பந்த உரிமைகளைப் பெற சமவாய்ப்பு இருந்தாக வேண்டும்.

**ஒப்பந்தக் குறிப்பு 1[1] விதி 1**
**சொத்து பாதுகாப்பு**

உங்கள் உடைமைகளை அமைதியாக சந்தோஷமாக அனுபவிக்க உங்களுக்கு உரிமை உண்டு. உங்களுக்கு சொந்தமானதில் அல்லது அவற்றை நீங்கள் பயன்படுத்தும்விதத்தில் பொதுவாக அரசு அதிகாரிகள் தலையிட முடியாது– குறிப்பிட்ட வரம்பான சூழ்நிலைகளில் தவிர.

**ஒப்பந்தக் குறிப்பு 1 விதி 2**
**கல்வி உரிமை**

கல்வி முறையை பெற்றுக்கொள்வது மறுக்கப்படாதிருக்க உங்களுக்கு உரிமை உண்டு.

**ஒப்பந்தக் குறிப்பு 1 விதி 3**
**சுயேச்சையான தேர்தல்கள் உரிமை**

சட்டம் செய்யும் அமைப்பின் (உ–ம்: நாடாளுமன்றத்தின்) உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெற வேண்டும், ரகசிய வாக்கொடுப்பு முறையில் நடத்தப்பட வேண்டும், வாக்களிக்கத் தகுதியானவர்கள் மேல் சில தகுதிகள் (உ–ம்: குறைந்தபட்ச வயது) விதிக்கப்படலாம்.

**ஒப்பந்தக் குறிப்பு 6– குறிப்பு 1 ஒப்பந்தக் குறிப்பின் 13–ன் விதி 1**
**மரணதண்டனை ஒழிப்பு**

போர்காலங்களில் வரம்புக்குட்பட்ட விதிவிலக்குகளுடன் குறிப்பு 6 மரணதண்டனை விதிப்பதை நீக்கியது. ஆனால் தெளிவாகக்

[1] (Protocol- ஒப்பந்தக் குறிப்புப் பத்திரம்– என்பது ஒப்பந்தத்தில் பின்னர் சேர்க்கப்பட வேண்டியன)

குறிப்பிட்ட சட்டங்களுக்கு ஏற்ப மட்டுமே அந்த நீக்கம். குறிப்பு 6–ஐ இடம்பெயர்க்கும் குறிப்பு குறிப்பு 13, எல்லா சூழ்நிலைகளிலும் மரணதண்டனையை நீக்குகிறது.

**மனித உரிமைகள் சட்டம் எப்படி என்னைப் பாதிக்கிறது?**

- **மனித உரிமைகள் சட்டம் எனக்கிருக்கும் உரிமைகளை மாற்றுகிறதா?**

இல்லை. மாறாக மனித உரிமைகள் சடடம் உங்கள் உரிமைகளை நீங்கள் அதிக விரைவாகவும் அதிக எளிதாகவும் சேரச் செய்கிறது. ஸ்ட்ராஸ்பார்குக்குப் போக வேண்டியிருப்பதற்குப் பதிலாக இப்போது யூகே–யில் உள்ள மன்றத்திலேயே உங்கள் வழக்கைத் தெரிவிக்க முடிகிறது.

- **அரசாங்க மற்றும் பொதுத்துறை அதிகாரிகள் நடந்துகொள்ளும் முறையை மனித உரிமைகள் சட்டம் பாதிக்கிறதா?**

ஆம். பொது அதிகாரிகள் அனைவரும் உங்களைப் பாதிக்கும் முடிவுகளை மேற்கொள்ளும் போது உங்கள் உரிமைகளில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று மனித உரிமைகள் சட்டம் கூறுகிறது. பொது அதிகாரிகள் என்பதில் அரசுத் துறைகள், உங்கள் வட்டார அதிகாரி, நலஅதிகாரி, மற்றும் பொதுப் பணிகளை மேற்கொள்ளும் போது போலீஸ், வழக்கு மன்றங்கள், தனியார் கம்பெனிகள் போன்றவை அடங்குகின்றன.

இதில் புதிதாக ஏதுமில்லை, உரிமைகளை மதிப்பதும் உரிமைகளையும் கடமைகளையும் சமநிலைப்படுத்துவதும் இந்த நாட்டின் பொதுத்துறையின் முக்கியமான பணியாகவே எப்போதும் இருந்து வருகிறது. ஆனால் உங்கள் மீது அதிகாரம் பெற்றிருப்பவர்கள் தாம் செய்வது நல்லதற்கே என அவர்கள் நம்புமிடத்திலும் கூட உங்கள் உரிமைகளை ஏறி மிதித்துவிடாதபடி தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதை மனித உரிமைகள் சட்டம் உறுதி செய்கிறது. அதனால் தாம் பேணும் சமநிலை குறித்து அவர்கள் கவனமாகயிருந்தாக வேண்டும். தனிமனிதர்களுக்கு தாம் உண்டாக்க முடியும் மிகச் சிறிய தீங்கு குறித்தும் முன்கூட்டி நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அரசாங்கம் ஒரு புதுச்சட்டத்தை கொண்டுவரும் ஒவ்வொரு தடவையும் சம்பந்தப்பட்ட அமைச்சர், மனித உரிமைகள்

சட்டத்தின்கீழ் அந்த புதிய சட்டம் ஒப்பந்த உரிமைகளுடன் பொருந்துவது எவ்வாறு என்பதைக் குறித்து அறிக்கை செய்தாக வேண்டும்.

- **என் உரிமைகளில் தலையிடும் இன்னொரு தனிமனிதனுக்கு எதிராக மனித உரிமைகள் சட்டத்தை நான் பயன்படுத்த முடியுமா?**

நேரடியாக முடியாது. ஒப்பந்த உரிமைகளை மீறியதற்கு அடுத்தவர் மேல் நீங்கள் வழக்குக் கொடுக்க வேண்டும். அடுத்தவர் உங்கள் மேல் வழக்குத் தொடுக்க முடியாது. ஆனால் முடிந்த அளவுக்கு ஒப்பந்த உரிமைகளுக்கு மிக நெருக்கமான பொருளும் பயனும் எல்லா சட்டங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டி இருப்பது தான் மனித உரிமைகள் சட்டம் என்பதால் மறைமுகமாக நீங்கள் நன்மை அடையலாம்.
உங்கள் உரிமைகள் எழுத்தில் வழங்கப்பட்டிருந்தால் அவற்றை நாங்கள் வலியுறுத்துவதும் எவ்வளவோ அதிக எளிதாகிறது. அவற்றைப் புறக்கணிக்கிறார் என நீங்கள் நினைக்கும் ஆளுக்கு அவற்றை நீங்கள் சுட்டிக்காட்ட முடிகிறது.

- **ஆனால் கடமைகள் பற்றி என்ன? சட்டத்தின் கீழ் என் உரிமைகள் வரம்பற்றனவா?**

அப்படி இல்லை. மனித உரிமைகளில் உள்ள பெரும்பாலான உரிமைகள், அவை அடுத்தவர்களின் உரிமைகளை அநியாயமகப் பாதிக்காதபடி– அல்லது பரந்த சமூகத்தின் உரிமைகளை ஒதுக்கித் தள்ளாதபடி அவற்றைத் தடுக்க, சில வரம்புகளைக் கொண்டுள்ளன. ஜனநாயக சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் உரிமைகள் இருக்கின்றன. உங்கள் உரிமைக்கே முதலிடம். ஆகையால் மற்ற ஒவ்வொருக்கும் கூட அப்படித்தான். எனவே அடுத்தவர்களை நியாயமாக நடத்துவதை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு நாம் அனைவருக்கும் நம் உரிமைகளுக்குச் சில வரம்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டி உள்ளது.

உதாரணமாக ஒருவர் ஒரு குற்றத்தில் ஈடுபட்டால் அவரது சுதந்திரமாக செயல்படும் உரிமையை கட்டுப்படுத்த வேண்டி உள்ளது. கூட்டம் நிறைந்த ஒரு அரங்கில் நெருப்புப் பிடித்திராத போது "தீ" என கத்துவதற்குப் பொருள் பேச்சுச் சுதந்திரம் என்பது ஆகாது.

- **மனித உரிமைகள் சட்டம் உள்ள படியே எதையாவது மாற்றி இருக்கிறதா?**

இது மற்ற எல்லா சட்டங்களையும் கட்டுப்படுத்தும் மேலும் உயர்ந்தவகைச் சட்டமாகும். உரிமைகளும் அவற்றின் வரம்புகளும் உண்மையில் அடிப்படை மதிப்பீடுகளின் ஒரு தொகுதியாகவே இருக்கின்றன. உரிமைகளையும் அவற்றோடு இணைந்து செல்லும் எல்லாவற்றையும் மதிப்பது என்பது மக்கள் சிந்திக்கும்–செயல்படும் விதத்தை மாற்ற உதவுகிறது. முடிவுகளும் கொள்கைகளும் விவாதிக்கப்பட்டுப் புரிந்து கொள்ளப்படும் சூழலை உருவாக்க உதவுகிறது. யூகே–யில் உள்ள அனைவர் வாழ்வின் தரத்தையும் உரிமைகள் சட்டம் எந்த அளவுக்கு உயர்த்துகிறது என்பது அதில் பொதிந்துள்ள மதிப்பீடுகளை நாம் எல்லோரும் எந்த அளவுக்கு மதிக்கிறோம் என்பதைச் சார்ந்துள்ளது.

- **ஜனநாயகத்துக்கு மனித உரிமைகள் சட்டம் என்ன பொருள் தருகிறது?**

ஜனநாயகம் என்பது அரசாங்கத்தின் ஒரு வடிவம்தான். இது ஒப்பந்த உரிமைகளுடன் பொருந்துகிறது. சகிப்புத் தன்மையையும் பரந்தமனமுமே ஜனநாயகத்தின் வலுவான அடித்தளமாக இருப்பவை. இவையே ஒப்பந்த உரிமைகளின் அடிப்படைகளாகவும் இருக்கின்றன. மனித உரிமைகள் சட்டமானது நம் ஜனநாயகத்தில் பாராளுமன்றத்தின் மையத் தகுதியை அங்கீகரிக்கிறது. அரசாங்கத்தில் வெளிப்படைத் தன்மைகளையும் திறந்த தன்மைகளையும் அது ஊக்குவிக்க வேண்டும். ஏனெனில் சிக்கல்களை விவாதிக்க பொதுநிலை அதிகாரிகள் ஒப்பந்த உரிமைகளின் மொழியைப் பயன் படுத்துவார்கள். ஏனெனில் இது நாம் எல்லோரும் புரிந்துகொள்ள முடியும். என்ன கூறப்பட்டுள்ளது என்பதையும் எம்மால் விளங்கிக் கொள்ள முடியும். நாமும் அதில் சேர்ந்து கொள்ளலாம்.

- **மனித உரிமைகள் சட்டம் ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்துமா?**

எல்லா நேரத்திலும் முடியாது.சில முடிவுகள் குறித்து வாதமும் உரிமைகளுக்கிடையில் மோதல்களும் நடக்கவே செய்யும் சட்டம் தலையிடக் கூடாத அந்தரங்கங்கத்தின் எல்லைக்குள் பாதிக்கப்பட்டோரின் உரிமைகள், வெளிப்பாட்டு சுதந்திரம் போன்ற விடயங்களில் நாம் எல்லோருக்கும் ஒத்த கருத்து இராது. இந்த விடயங்கள் மீதான முடிவுகளை மனித உரிமைகள் சட்டம் பாதிக்கிறது.

தவறான விடையை அடைந்திருப்பதாக சிலர் உணரவே செய்வார்கள். ஆனால் சரியான விவாதத்தையும் அடிப்படை உரிமைகள் சமநிலையான முறையில் மதிக்கப்படுவதையும் மனித உரிமைகள் சட்டம் உறுதி செய்தாக வேண்டும்.

- **நமது வழக்கு மன்றங்களுக்கும் நீதிபதிகளுக்கும் மனித உரிமைச் சட்டம் எப்படி பொருள்படுகிறது?**

தனிமனிதர்களின் ஒப்பந்த உரிமைகளை காக்க மனித உரிமைகள் சட்டம் அவர்களுக்கு உதவுகிறது. பரந்த சமுகத்தின் உரிமைகள் சரியாக சம நிலைப்பட்டிருக்கிறதா என்பதை அவர்களால் சோதித்தறிய முடியும். தனிமனிதர் உரிமைகள் பாதிக்கப்பட வேண்டும் என்றால் பொது அதிகாரம் ஒரு சிறு விதையை உடைக்க ஒரு பெரும் சம்மட்டியைப் பயன் படுத்திக் கொண்டிருக்கவில்லை என்பதைக் காட்ட வேண்டிய தேவை வரும். இதுவே அடிக்கடி "விகித பாகம்" (proportionality) எனக் குறிக்கப்படுகிறது. ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட ஒரு நோக்கத்தைச் சாதிக்கத் தேவையான அளவு உரிமைகளில் மட்டும் தலையிடுதல் என்பதே இது.
உதாரணமாக, கூடும் உரிமை– மற்றவர்களை சந்திக்கும் உரிமை ஒரு அடிப்படை உரிமையாகும்.

எனவே குறிப்பிட்ட ஆர்பாட்டங்களைத் தடுப்பது, அல்லது குறிப்பிட்ட தடங்களில் பேரணி செல்வதைக் கட்டுப்படுத்துவது என போலீசுக்கோ, அதிகாரியளோ நினைத்துக் கொண்டிருந்தால் அவர்கள் அப்படியே ஒட்டுமொத்மான ஒரு தடையை விதித்துவிடக்கூடாது. மற்றவர்கள் நியாயமாக தமக்கு ஏற்படக்கூடாது என எதிர்பார்க்கக் கூடிய இடங்கள் அவர்களுக்கு ஏற்பட்டால் தேவையான அளவுக்கு மேல் செய்யாதிருக்க எது பொருத்தமான அளவு என்பதை கவனமாக அவர்கள் சிந்திக்க வேண்டும். ஒரு பொது அதிகாரி உங்கள் உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் போது உங்களுக்கு உதவ நாட்டில் இருக்கும் ஒவ்வொரு நீதிமன்றமும் பயிற்றுவிக்கப்பட்டு இருக்கிறது.

- **அப்படியானால் நீதி மன்றங்கள் நாடாளுமன்றத்தை ஒதுக்கித்தள்ளக் கூடுமா?**

கிடையாது. நீதிபதிகள் நாடாளுமன்றத்தை மறுத்துரைக்க முடியாது என்பதை மனித உரிமைகள் சட்டம் திட்டவட்டமாகக் கூறுகிறது. ஆனால் சட்டத்தை ஒப்பந்த உரிமைகளின் வழியில் நீதிமன்றங்கள்

வளர்த்தெடுக்க முடியக் கூடியவர்களாகவே எப்போதும் இருந்து வருகிறார்கள். ஆனால் மனித உரிமைகள் சட்டம் உங்கள் ஒப்பந்த உரிமைகளின் அடிப்படையில் ஒரு ஜனநாயக மதிப்பீடுகளின் எல்லைக்குள் அவர்கள் இருக்க வேண்டும் என்று குறிக்கிறது.

- **மனித உரிமைகள் சட்டம் என்றால் அதிக நீதிமன்ற வழக்குகள் எனப்படுகிறதா?**

நீண்ட காலப்போக்கில் அவ்வாறு இருக்கமாட்டது. எப்போதும் ஒரு கடைசி வழியாகத்தான் நீதிமன்றத்துக்கு செல்வது இருக்கும். உரிமைகளைத் தெளிவுபடுத்த மனித உரிமைகள் சட்டம் உதவுகிறது. சட்டத்துக்கு நீதிமன்றங்கள் பொருள்தரும் விதத்தை பொது அதிகாரிகள் புரிந்து கொள்கிறார்கள். ஆரம்ப நாள்களில் மக்கள் தம் உரிமைகளுக்கும் மற்றமக்களின் உரிமைகளுக்கும் இடையிலான சமநிலை எப்படித்தான் உருவாகிறது எனக் காண புதிய சட்டத்தைப் பயன்படுத்த முயன்றார்கள். ஆனால் பயனற்ற வாக்குவாதங்களில் நேரத்தை தாம் வீணாக்க விரும்பவில்லை என்பதை நீதிபதிகள் ஏற்கனவே தெளிவாக்கி இருக்கிறார்கள்.

உதாரணமாக, எமக்கு மண வயது வந்திருந்தால் நாம் மணம் முடிக்கலாம் என்பது நம் அடிப்படை உரிமைகளில் ஒன்று. யூகே–யில் இவ்வயது 16 என சட்டம் நிர்ணயிக்கிறது. இதைவிட இளம் வயதிலேயே மணம்முடிக்க அனுமதிக்க வேண்டும் என வாதிட வழக்குமன்றம் ஏறுவது நேரத்தை வீணடிப்பதாகும் என்றே பெரும்பாலும் உறுதியாகக் கருதப்படும். இவ்விதமான முடிவை ஒவ்வொரு நாடும் தானே எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றது.

- **ஸ்காட்லாந்து, வேல்ஸ், வடஅயர்லாந்து, ஆகிய நாடுகளின் விடயம் என்ன?**

ஒப்பந்தம் கூறுவது என்னவானாலும் வெஸ்மினிஸ்ட்டரில் உள்ள நாடாளுமன்றம் எந்த சட்டத்தையும் இயற்ற அதிகாரம் பெற்றுள்ளது. வேல்ஸ்சிலும், வடஅயர்லாந்திலும் உள்ள சட்டப்பேரவைகளுக்கும் ஸ்காட்லாந்தில் உள்ள நாடாளுமன்றத்திற்கும் இந்த அதிகாரம் இல்லை. ஒப்பந்த உரிமைகளுடன் பொருந்தாத சட்டங்களை அவை இயற்றுமானால் நீதிமன்றங்கள் அவற்றை நிராகரித்து விடும்.

- **மேலதிகமாக நான் தெரிந்து கொள்ளும் வழிவகைகள் என்ன?**

மனித உரிமைகள் சட்டம் பற்றி கூடுதல் விவரம்பெற கீழே தரப்பட்டுள்ள இணையதளத்திற்குப் போய் பார்க்கவும்.
**www.humanrights.gov.uk**

**அல்லது தரப்பட்ட முகவரிக்கு எழுதுங்கள்:** Human Rights Division, Ministry of Justice, 6th Floor, Selborne House, 54 Victoria Street, London SW1E 6QW

**வடஅயர்லாந்துக்கான முகவரி பின் வருமாறு:** The Equality and Human Rights Unit, Office of the First Minister and Deputy First Minister (OFMDFM), Room E3.18, Castle Buildings, Stormont Estate, Belfast, BT4 3SR

**ஸ்காட்லந்துக்கான முகவரி பின் வருமாறு:** Scottish Executive Justice Division, St Andrew's House, Regent Road, Edinburgh, EH1 3DG

**வேல்ஸ்கான முகவரி பின் வருமாறு:** Strategic Equality & Diversity Unit, Welsh Assembly Government, Cathays Park, Cardiff, CF10 3NQ

**மனித உரிமைகள் சட்டம் பற்றிய அதிக விவரம் தரும் நூல் – மனித உரிமை சட்டத்திற்கான வழிகாட்டு நூல்–Guide to the Human Rights Act, என்ற நூல் ஆங்கிலம், வேல்ஸ் மொழிகளில் கிடைக்கும்.**
இலவச பிரதியைப் பெற 020 7210 1437 என்ற தொலைபேசி எண்ணில் அல்லது மினிக்காம் 0800 358 3506 எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

இத் துண்டுப்பிரசுரத்தின் பிரதியை ஒலிநாடா அல்லது பிரெயிஸ்லில் பெற விரும்புவீர்களானால் அல்லது கீழ்க்குறித்த ஏதாவது மொழிகளில் உங்களுக்குத் தேவைப்பட்டால் தயவுசெய்து 020 7210 1437 அல்லது மினிக்காம் 0800 358 3506 என்ற தொலைபேசி எண்ணில் அழைக்கவும்.

**இத் துண்டுப்பிரசுரம் பின்வரும் மொழிகளில் கிடைக்கிறது:**
வேல்ஸ், வங்களாம், பஞ்சாபி, குஜராத்தி, உருது, அரபி, கன்ரனீஸ், சோமாலி, பிரென்ஜ், தமிழ்.